ஆண்டறிக்கை

2020

தேசிய வடிவமைப்பு நிலையம்

உள்ளடக்கம்

வழிகாட்டும் கோட்பாடுகள் 01

- நோக்கு
- செயற்பணி

நிறுவன ரீதியான நோக்கங்களும், பெறுமானங்களும் 02

நிறுவனச் சட்டமும், பதிவும் 03 - 04

நிறுவன முகாமைத்துவம் 05

சிரேஷ்ட முகாமைத்துவம் 06

தலைவரின் செய்தி 07

பணிப்பாளரின் செய்தி 08

நிறுவன ஒழுங்கமைப்பு 09

மனித வனங்கள் 10

அபிவிருத்திச் செயற்பாடுகள் , சேவைகளை ஆற்றல் 11 - 43

2020 டிசம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் 44 - 77

2020 கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 78 - 87

இனணப்பு 01

வழிகாட்டும் கோட்பாடுகள்

நோக்கு

வடிவமைப்பு அபிவிருத்தி மற்றும் புத்தாக்க வடிவமைப்புக்களை அறிமுகம் செய்வதன் மூலம் கைப்பணிக் கைத்தொழில் துறையை மென்மேலும் உயிரோட்டமும், முனைப்பும்மிக்க பொருளாதாரத் துறையாக மாற்றியமைத்தல்.

செயற்பணி

மேம்படுத்தல், அபிவிருத்தி, ஆற்றல்களைக் கட்டியெழுப்பல், பிரபல்யப்படுத்தல் மற்றும் பிரதான நீரோட்டத்தில் இணைப்பதன் மூலம் சந்தையை அடிப்படையாகக் கொண்ட ஆக்கபூர்வமான வடிவமைப்புக்களை அறிமுகம் செய்தல்.

நிறுவனத்தின் நோக்கங்கள்

- கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களினால் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற கைப்பணிப் பொருட்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் உள்நாட்டிலும், ஏற்றுமதிச் சந்தையிலும் தற்கால மற்றும் எதிர்கால சந்தைப் போக்குகளுக்கு அமைய புத்தாக்கங்களை அறிமுகம் செய்தல்.
- உற்பத்திக் கொள்ளளவை அதிகரித்துக் கொள்ளல் மற்றும் உயர் தரத்தைக் கொண்ட கைப்பணி பொருட்களை உற்பத்தி செய்வதை நோக்காகக் கொண்டு முறையான தொழில்நுட்ப முறைகள் மற்றும் மூலப் பொருட்களைத் தயார் செய்துகொள்ளும் முறைகளை அறிமுகம் செய்தல்.
- வருமானத்தை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் கைப்பணிக் கைத்தொழில் துறையில் மென்மேலும் நல்ல முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு கலைஞர்களுக்கு உயர் நிபுணத்துவ, தொழில்நுட்ப மற்றும் வடிவமைப்பு அபிவிருத்திப் பயிற்சி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களுக்கு புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதற்கான வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் பொது வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- கைப்பணி ஆக்கங்களுக்கு மென்மேலும் வினைத்திறன்மிக்க புத்தாக்க உற்பத்தி முறையியல்களை அறிமுகம் செய்தல்.
- வெளியீடுகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் நூலக வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களுக்கு, விற்பனையாளர்களுக்கு மற்றும் கைப்பணிக் கைத்தொழில் துறையுடன் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் கோரிக்கைகளுக்கு அமைய வடிவமைப்பு மதியுரை சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- வடிவமைப்பு ஆக்கபூர்வமான திறன்களை வளர்த்தல் மற்றும் தொழில்சார் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

பெறுமானங்கள்

- ❖ நாம் பொறுப்புடன் கட்டுப்பட்டுள்ளோம்.
- ❖ நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுள்ளோம்.
- ❖ திறன் மற்றும் கூட்டு முயற்சிகள் பற்றி நம்பிக்கை கொண்டுள்ளோம்.
- ❖ புதிய தொழில்நுட்பம் மற்றும் விருப்பத்தை பயன்படுத்த முனைவோம்.
- ❖ சிறந்த நுகர்வோர் சேவையைப் பெற்றுக் கொடுப்பதாக நம்புகின்றோம்.

நிறுவனச் சட்டமும், பதிவும்

1982 இன் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவையின் இணை நிறுவனச் சட்டத்தின் கீழ் 1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தேசிய வடிவமைப்பு நிலையமானது, உள்நாட்டு கைப்பணிக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக கைப்பணிக் கலைஞர்களை சம்பிரதாயத்திற்கு அப்பால் இட்டுச் சென்று கைப்பணிக் கைத்தொழில் துறையின் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு தாபிக்கப்பட்டு சேவைகளை ஆற்றிவருகின்ற அரச நிறுவனமொன்றாகும் என்பதுடன் தற்போது பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்திகள் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

ஒழுங்கமைப்பு

தேசிய வடிவமைப்பு நிலையம்,ஒட்டுமொத்த கைப்பணிக் கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்காக தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எப்பொழுதும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதன் போது மொரட்டுவை, கட்டுபெத்த, டி மெல் வீதியின் இலக்கம் 10 எனும் இடத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகம் மற்றும் மத்திய மாகாணத்தினை உள்ளடக்கும் வகையில் கண்டி, கலாபுரம், நத்தரம்பொத்தயில் அமைந்துள்ள கிடை அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் பல்வேறு செயற்பாடுகளையும் அமுல்படுத்தி கைப்பணிக் கைத்தொழில் கலைஞரை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இதற்கு மேலதிகமாக, டிப்ளோமா பாடநெறி மூலம் புத்தாக்க கலைஞர்களை உருவாக்கும் நிலையமாக செயற்பட்டு வருகின்ற தேசிய வடிவமைப்புக் கல்லூரி தலைமை அலுவலக வளவில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் ஆக்கபூர்வமான ஆற்றல்கள், திறமைகளைக் கொண்டுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தேசிய மட்டத்திலிருந்து சர்வதேச மட்டம் வரை தொழில்சார் அறிவைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்புடுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நத்தரம்பொத்த கிளை அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள பித்தலை, அரக்கு மற்றும் தோள் சம்பந்தப்பட்ட வேலைத்தலங்கள் மற்றும் பொது வசதிகள் நிலையத்தின் ஊடாக கைப்பணிக் கைத்தொழில் கலைஞருக்குத் தொடர்ச்சியாக சேவை ஆற்றப்பட்டு வருகின்றது.

தேசிய வடிவமைப்பு நிலையம் தமது நோக்கை பிரதானமாக்க கொண்டு அமுல்படுத்தியுள்ள செயற்பணியின் மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் போது தலைமை அலுவலகத்தின் முன்னெடுப்புடன் மற்றும் நத்தரம்பொத்தயில் அமைந்துள்ள கிளை அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் செயற்றிட்டத்திற்கு அமைய உரிய பணிகள் அமுல்படுத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்திகள் இராஜாங்க அமைச்சின் வழிகாட்டல், தற்போது காணப்படுகின்ற ஏனைய சகோதர நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகள், கைப்பணிக் கைத்தொழில் துறை தொடர்பிலான பல்வேறு அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களாக செயற்படுகின்ற தொண்டர் அமைப்புக்கள், கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்கள் மற்றும் வேறு வெளி நிறுவனங்கள் மேலே குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக தொடர்ச்சியாக எம்முடன் தொடர்புகொள்கின்றன.

சகல நிருவாக, நிதி, விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகள், வடிவமைப்பு அபிவிருத்தி வடிவமைப்புக் கல்வி, தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆகிய துறைகள் தொடர்பிலான பணிகளும், பொது வசதிகள் மற்றும் நூலக சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற நிறுவனத்தின் பிரதான நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குரிய சகல பணிகளும் தலைமை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், நிருவாகம், நிதி மற்றும் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகள் தவிர ஏனைய சகல நடவடிக்கைகளும் நத்தரம்பொத்த கருத்திட்ட அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தலைமை அலுவலகம் - இல. 10, டி மெல் வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ.

தொலைபேசி /பெக்ஸ் இல. - 011-2607114 -தலைவர்

011-2626345 -பணிப்பாளர்

011-2607814 - பொது

பெக்ஸ் 011-2607111

மின்னஞ்சல் slndcrisep@yahoo.com / info@slndc.gov.lk

(ii) நத்தரம்பொத்த கருத்திட்டம் அலுவலகம் மற்றும் வேலைத்தலம் - கலாபுரம், நத்தரம்பொத்த.

தொலைபேசி /பெக்ஸ் இல. - 081-2420038

பணிப்பாளர் சபை

1) திரு அஜித் ஜயவர்த்தன - தலைவர்

2) திரு சுதத் அபேசேகர - உறுப்பினர்

3) திரு பிரதீப் குணவர்த்தன - உறுப்பினர்

4) திருமதி சந்திரிக்கா சேனாநாயக்க - உறுப்பினர்

5) திருமதி சித்ராஞ்ஜலீ திசாநாயக்க - உறுப்பினர்

6) திருமதி ஹசினி சில்வா - உறுப்பினர்

7) திரு ஆனந்த ஜயசிங்க - உறுப்பினர்

8) திரு எஸ்.எம். அபேரத்ன - உறுப்பினர்

9) திரு கே.சீ.டி. இசார - அமைச்சின் பிரதிநிதி

சிரேஷ்ட முகாமைத்துவம்

1) திரு அஜித் ஜயவர்த்தன	- தலைவர்
2) திரு எம்.ஏ.எஸ்.எஸ்.கே. சந்திரசிறி	- பணிப்பாளர்
3) திருமதி எம். சோமலதா கம்லத்	-உதவிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) மேல் மாகாணம் / பிரிவுத் தலைவர்
4) திரு பீ.கே. விஜேசிங்க	-உதவிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) மத்திய மாகாணம்
5) திரு பி. மனதுங்க	-உதவிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) வடமத்திய மற்றும் வடமேல் மாகாணம்
6) செல்வி தமரா தமயந்தி	-உதவிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) ஊவா மற்றும் சபரகமுவா மாகாணம்
7) திரு விஜித பண்டார	-உதவிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்
8) திருமதி பீ.ஆர். ரணவீர	- கணக்காளர்
9) திருமதி பீ.கே.என். அசங்கிகா	- உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)
10) திரு என்.பி.கே. இந்திக்க	- உதவிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்)
11) திருமதி பீ.ஏ.என்.என். பமுணுசிங்க	- உதவிப் பணிப்பாளர் (இரசாயனம்)

வங்கியாளர்கள்	**கணக்காய்வு**
இலங்கை வங்கி, கட்டுபெத்த	அரசாங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதி
மக்கள் வங்கி, கட்டுபெத்த	கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

தலைவரின் செய்தி

2020 ஆம் ஆண்டு ஆரம்பமானதை அடுத்து,"சுபீட்சத்தின் நோக்கு" வழிகாட்டலின் அடிப்படையில் இதுவரை 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவையின் இணை நிறுவன் சட்டம் மற்றும் நிறுவன விடயப்பரப்பின் கீழ் செயற்பறி மற்றும் திசைமுகப்படுத்தலை குறிப்பிட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை மூலம் புதியதொரு திசையில் பயணிக்கச் செய்யப்பட்டது. தேசிய வடிவமைப்பு நிலையமானது,பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்திகள் இராஜாங்க அமைச்சின் கீழ் தமது நோக்கங்கள் மற்றும் பெறுமானங்களுடன் புதிய பலத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்டது.

எவ்வாறாயினும் 1983 ஆரம்ப ஆண்டின் பின்னர் வரலாற்றில் மிகவும் சவால்மிக்க யுகத்தை தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பயிற்சிச் செயன்முறை முகம்பொடுத்தது இந்த ஆண்டிலாகும். பூகோளத் தொற்றுநோயாக உருவெடுத்த கொவிட் - 19 தொற்றுநோய் இதற்கான காரணமாகும். இந்த நிலைமைக்கு இசைவாக தொலைக் கல்வி உபாயமுறையைப் பின்பற்றி கல்வி நடவடிக்கைகளை முறைப்படுத்தும் முறையியல் மற்றும் நிலவிய சவால்களுக்கு மத்தியில் மாற்றுப் பயிற்சி முறையியல்களை பரீட்சித்துப் பார்த்து மென்மேலும் தரமான பெறுபேறுகளை அடைந்துகொள்ள எமக்கு இயலுமாயிற்று. இதுவரை தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் கவனம் செலுத்தப்படாதிருந்த பத்திக் உற்பத்தித் துஜற மற்றும் அதன் வடிவமைப்புக்கான அர்ப்பணிப்பும் இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளதுடன், அத்துறையில் நாட்டில் குறிப்பிடத்தக்க முன்னோடி அரசதுறை நிறுவனமாக தேசிய வடிவமைப்பு நிலையம் மாறியுள்ளது.

நாட்டில் நிலவிய நிலைமையை மீளாய்வு செய்து தேசிய வடிவமைப்பு நிலையத்தில் பௌதீக ரீதியாக அழிவடைந்துவருகின்ற மற்றும் புனரமைப்புச் செய்ய வேண்டியிருந்த உட்கட்டமைப்பு வசதிகளை முன்னதாகவே இனங்கண்டதன் மூலம் அவற்றுக்கு கூடுதல் முன்னுரிமை வழங்கப்பட்டதன் மூலம் கொவிட் தொற்று நோய் நிலைமைக்கு மத்தியிலாயினும், இந்த ஆண்டின் நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து எதிர்கால அபிவிருத்திப் பணிகளுக்கு சிறந்த திட்டமொன்றை பூர்த்தி செய்ய எமக்கு முடியுமாயிற்று.

தேசிய வடிவமைப்பு நிலையம் இந்த ஆண்டில் அமைந்துகொண்டுள்ள வெற்றிக்கு கௌரவ கைத்தொழில் அமைச்சர், இராஜாங்க அமைச்சர் ஆகியோர் வழங்கிய வழிகாட்டல் மற்றும் ஊக்குவிப்பை உயர்வாக மதிப்பதுடன், இராஜாங்க அமைச்சின் செயலாளரும், எமது பணிப்பாளர் சபையும் வழங்கிவந்த அயராத ஒத்துழைப்பையும் இங்கு நினைவுகூர்வது அவசியமாகும். மேலும் எமது நிறுவனத்தின் ஒட்டுமொத்த பதவியணியனரும் இந்த ஆண்டில் சவால்களுக்கு மத்தியில் வெளிப்படுத்திய அர்ப்பணிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவும் இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

பணிப்பாளரின் செய்தி

2020 ஆம் ஆண்டின் தேசிய வடிவமைப்பு நிலையத்தின் செயலாற்றுகையை மீளாய்வு செய்வதற்கு மற்றும் ஆண்டறிக்கைக்கு செய்தியொன்றை வெளியிடக் கிடைத்ததை நான் பெற்ற சிறப்புரிமையாகக் கருதுகின்றேன். நிறுவனத்தின் பிரதான நோக்கங்களுக்கு மற்றும் தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்குச் சமாந்தரமாக தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் இந்த ஆண்டிலும் ஓரளவு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்று குறிப்பிட முடியும்.

2020 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று நிலைக்கு மத்தியிலாயினும் நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு புதிய தவிசாளரின் வழிகாட்டலின் கீழ் எமது நிறுவனத்திற்கு ஆற்றல் கிடைத்ததுடன், அதற்கு அமைச்சின் ஒத்துழைப்பும் முழுமையாகக் கிடைத்தமை எமக்கு பலமாக அமைந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

2020 ஆம் ஆண்டு நத்தரம்பொத அலுவலகத்திலும் பத்திக் பிரிவொன்றை தாபிக்க திட்டமிட வாய்ப்புக் கிடைத்தமை விசேட அம்சமாகும்.


இந்த ஆண்டில் உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை பத்திக் துறைக்கு முன்னுரிமை வழங்கி மேற்கொள்ள தேசிய வடிவமைப்பு நிலையம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் புதிய கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை இந்த ஆண்டில் நிறைவு செய்ய வாய்ப்புக் கிடைத்ததுடன்,செங்களி சார்ந்த சில புத்தாக்கங்களுக்கு பேடன்ட் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஊக்கத்தை வழங்கிய கௌரவ அமைச்சர், கௌரவ இராஜாங்க அமைச்சர் மற்றும் செயலாளர் உள்ளிட்ட ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.ஏ.எஸ்.எஸ்.கே. சந்திரசிறி
பணிப்பாளர்,
தேசிய வடிவமைப்பு நிலையம்.

நிறுவன ஒழுங்கமைப்பு



மனித வளம்

பதவிப் பெயர்	சேவை வகுதி	அங்கீகரித்தது	உள்ளது	வெற்றிடம்
பணிப்பாளர்	HM 1-3	01	01	-
உதவிப் பணிப்பாளர் /பிரதிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி)	MM 1-1	06	06	-
உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்)	MM 1-1	01	01	-
உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் (இயந்திரசாதன)	MM 1-1	01	-	01
உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் (இரசாயனம்)	MM 1-1	01	01	-
உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்)	MM 1-1	01	01	-
கணக்காளர்	MM 1-1	01	01	-
சிரேஷ்ட கணக்கீட்டு அலுவலர்	MM 1-1	01	01	-
நிருவாக அலுவலர்	JM 1-1	02	01	01
கணக்கீட்டு அலுவலர்	JM 1-1	02	02	-
கணக்காய்வு அலுவலர்	JM 1-1	04	04	-
சிரேஷ்ட வடிவமைப்பாளர்	JM 1-1	01	01	-
வடிவமைப்பு பயிற்சி ஒருங்கிணைப்பு அலுவலர்	JM 1-1	01	01	-
சபை செயலாளர்	JM 1-1	01	-	01
சந்தைப்படுத்தல் அலுவலர்	JM 1-1	01	-	01
வடிவமைப்பாளர்	MA 5-1	09	03	06
நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர்	MA 5-1	01	-	01
நூலக மற்றும் தகவல் உதவியாளர்	MA 3	01	-	01
அபிவிருத்தி உதவியாளர்	MA 3	03	01	02
சந்தைப்படுத்தல் உதவியாளர்	MA 3	01	-	01
அந்தரங்க உதவியாளர்	MA 2-1	02	01	01
முகாமைத்துவ உதவியாளர்	MA 1-1	13	08	05
திறன் போதனாசிரியர்	MA 1-1	32	28	04
சாரதி	PL 3	06 01 contract	06	01 contract
அலுவலக சிற்றூழியர்	PL 1-1	17	13	04
காவலாளி	PL 1-1	04	03	01
பயிற்சி உதவியாளர் (தனிப்பட்ட வகையில்)	PL - 1	01	01	

தேசிய வடிவமைப்பு நிலையம்
அபிவிருத்திச் செயற்பாடுகள் - 2020

புதிய வடிவமைப்புத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

தேசிய வடிவமைப்பு நிலையமானது, தமது நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி, கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்குப் பொருத்தமானவாறு புத்தாக்கங்களைத் திட்டமிடுவதும், அவற்றைக் கைப்பணிக் கலைஞர்களுக்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக அறிமுகம் செய்வதற்கும் முன்னுரிமை வழங்கி செயற்பட்டு வருவதுடன், இதன் இடைநிலைப் பணியொன்றான திட்டமிடப்பட்ட ஆக்கங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியை தே.வ.நி. வேலைத்தலங்களில் ஆரம்ப மாதிரியமைப்புக்களாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த ஆண்டினுள் 700 புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்ய இலக்காகக் கொள்ளப்பட்டிருந்ததுடன், தலைமை அலுவலகத்தின் வடிவமைப்புப் பிரிவு மற்றும் நத்தரப்பொத கிளை அலுவலகத்தினால் 438 புத்தாக்கங்களின் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தே.வ.நி. வேலைத்தலத்தில் புத்தாக்கங்களை மாதிரிகளாக மாற்றியமைப்பதற்கு அவற்றிலிருந்து 394 புத்தாக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக உற்பத்திகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், புதிய வடிவமைப்புக் கண்காட்சிக்காக, வெளி கலைஞர்களின் தேவை மற்றும் கோரிக்கையின் அடிப்படையில் புதிய 44 புத்தாக்கங்கள் திட்டமிடப்பட்டு நேரடியாக வெளிக் கலைஞர்களுக்கு அறிமுகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு தே.வடி.நி. வேலைத்தலங்களுக்கு புதிய வடிவமைப்புத் திட்டங்களைப் பெற்றுக் கொடுக்க வடிவமைப்பு அபிவிருத்திப் பிரிவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இல.	கைப்பணிக் கைத்தொழில் துறை	திட்டமிடப்பட்ட வடிவமைப்புக்களின் எண்ணிக்கை
01	பன் மற்றும் நார்த்துறை	20
02	பலகைத்துறை	34
03	ஆடைத்துறை	38
04	மூங்கில் மற்றும் பிரம்பு	44
05	செங்களித்துறை	52
06	தும்புத்துறை	27
07	ஆபரணத்துறை	36
08	தோல் உற்பத்தித்துறை	49
09	பித்தலைத்துறை	43
10	அரக்குத்துறை	51
11	வேலைத்தலங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை	**394**
12	**வெளிக் கலைஞர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கையின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட புதிய வடிவமைப்புக்கள்**	44
13	**திட்டமிடப்பட்ட மொத்த வடிவமைப்புக்களின் எண்ணிக்கை**	**438**

புத்தாக்கங்களை உருமாதிரிகளாக மாற்றியமைத்தல்

திட்டமிடப்பட்ட புத்தாக்கக் குறிப்புக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட புத்தாக்கங்கள், மொரட்டுவை மற்றும் நத்தரம்பொத அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள வேலைத்தலங்களின் ஊடாக உருமாதிரிகளாக தயாரிக்கப்படுகின்றன. இதன் போது தோல், பித்தலை மற்றும் அரக்கு ஆகிய துறைகளுக்குத் திட்டமிடப்பட்ட புத்தாக்கங்கள், நத்தரம்பொத வேலைத்தலங்களின் மூலம் உருமாதிரிகளாக தயார் செய்யப்படுவதுடன், பன், நார், செங்களி, தும்பு, மூங்கில், பிரம்பு, ஆடை, பலகை மற்றும் ஆபரணம் ஆகிய துறைகளை பிரதானமாகக் கொண்ட புத்தாக்கங்கள் மொரட்டுவை வேலைத்தலத்தில் உருமாதிரிகளாகத் தயார் செய்யப்படுகின்றன.

இந்த உருமாதிரிகள், புத்தாக்கங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நாடு முழுவதிலும் பரந்துள்ள கைப்பணிக் கலைஞர்களுக்கு அவ்வவ் துறைகளில் அறிமுகம் செய்யப்படுகின்றன. மேலும், அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படகின்ற கோரிக்கைகளின் அடிப்படையில், இந்தப் புத்தாக்க வடிவமைப்புக்களின் உருமாதிரிகள் அறிமுகம் செய்யப்பட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படும்.

அறிமுகம் செய்யப்பட்ட புத்தாக்கங்கள் கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களினால் முடிவுப் பொருட்களாக மாற்றப்பட்ட பின்னர், மேற்படி உற்பத்திகளின் விற்பனைக் கண்காட்சிகள், சந்தைகள் ஊடாக அவற்றை விற்பனை செய்வதற்கும், கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நிறுவனம் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுகின்றது.

இதற்கு மேலதிகமாக, இலங்கை கைப்பணிக் கைத்தொழில் சபை மற்றும் வேறு தனியார் வியாபார நிறுவனங்கள் ஊடாகவும் இப்புத்தாக்க வடிவமைப்புக்கள் சந்தையில் அறிமுகம் செய்யப்படும்.

தே.வ.நி. வேலைத்தலங்களில் புத்தாக்கங்களை உருமாதிரிகளாக மாற்றியமைப்பதன் கீழ் 2020 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளின் ஊடாக 500 புத்தாக்க உருமாதிரிகளை தயார் செய்வது இலக்காகக் கொள்ளப்பட்டிருந்ததுடன், ஆண்டினுள் 354 புத்தாக்க உருமாதிரிகளைத் தயார் செய்துகொள்ள தேசிய வடிவமைப்பு நிலையம் நடவடிக்கை எடுத்திருந்தது.

ஒவ்வொரு துறைக்கும் தே.வ.நிலையத்தின் வேலைத்தலங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்ட புத்தாக்கங்கள் பின்வருமாறு ஆரம்ப உருமாதிரிகளாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இல	கைப்பணிக் கைத்தொழில் துறை	ஆரம்ப மாதிரி உருக்களின் எண்ணிக்கை	மொத்தம்
தலைமை அலுவலகம்			229
01	பன் மற்றும் நார் துறை	17	
02	பலகை துறை	28	
03	ஆடைத் துறை	38	
04	மூங்கில் மற்றும் பிரம்பு	41	
05	செங்களி துறை	45	
06	தும்புத் துறை	33	
07	ஆபரணத் துறை	27	
நத்தரம்பொத்த அலுவலகம்			125
01	தோள் துறை	40	
02	பித்தலை துறை	36	
03	அரக்குத் துறை	49	

புத்தாக்க அபிவிருத்திக்கான செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

- **செயற்றிட்டத்தின் கீழ் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

நிறுவனத்தின் மூலதன ஏற்பாடுகளின் கீழ், விழிப்புணர்வூட்டல், ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட புத்தாக்கங்களை அறிமுகம் செய்யும் செயன்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 23 ஐ நடாத்துவதற்கு மற்றும் பயனாளிகள் 600 பேரை இதன் மூலம் பயிற்றுவிக்க இலக்காகக் கொள்ளப்பட்டது.

அதற்கமைய பின்வருமாறு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 02 நடாத்தப்பட்டதுடன், 197 பேர் பயிற்றுவிக்கப்பட்டார்கள். மேலும் புத்தாக்கங்களை வடிவமைப்பு மற்றும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் செயன்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 07 உம் நடாத்தப்பட்டன.

செயற்றிட்டத்தின் கீழ் மூலதன ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

இல	நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை	கைப்பணிக் கைத்தொழில் துறை	ஆரம்பத் திகதி மற்றும் நடாத்தப் பட்ட நாட்களின் எண்ணிக்கை	மாவட்டம் / நடாத்தப்பட்ட இடம்	கலைஞர்களின் எண்ணிக்கை	ஒருங்கிணைப்பு நிறுவனம்
01	விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்	பலகை	பெப்ருவரி 05	புத்தளம், சிலாபம்	15	வடமேல் மாகாண கைத்தொழில் திணைக்களம்
02	புத்தாக்க நிகழ்ச்சித்திட்டம்	ஆடை	மார்ச் 03 மற்றும் மார்ச் 04	மாத்தறை, தெனியாய	31	தே.வ.நி.
03	விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்	பனை ஓலை	2020.09.01 நாள் 01	திருகோணமலை	48	தேசிய அருங்கலைகள் பேரவை
04	புத்தாக்க நிகழ்ச்சித்திட்டம்		2020.09.23 நாள் 04			
05	புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டம்	அரக்கு	செப். 10 நாள் 04	ஹம்பநர்தோட்டை, பெலிகல்ல, அங்குல்மடுவ	25	தே.வ.நி.
06	புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டம்	பித்தலை	செப். 09 நாள் 04	ஹம்பநர்தோட்டை, பெலிகல்ல, அங்குல்மடுவ	28	தே.வ.நி.
07	புத்தாக்க நிகழ்ச்சித்திட்டம்	மூங்கில்	செப். 02 நாள் 02	கேகாலை, யடியாந்தோட்டை, பெலெல்லபம	15	தே.வ.நி.
08	புதிய தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டம்	ஆடை	செப். 22 நாள் 04	குருநாகல், ரீதிகம, ரம்படகல்ல	27	தே.வ.நி.
09	புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டம்	செங்களி	டிசம். 10 நாள் 04	கேகாலை, மொலகொட	23	தே.வ.நி.

- **அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கைகள் மற்றும் ஏற்பாடுகளின் கீழ் புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்**

அர மற்றும் அரசசசார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கை மற்றும் ஏற்பாடுகளின் கீழ் கைப்பணிக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் இத்துறையைச் சேர்ந்த புதிய இளைஞர் குழுக்களுக்கு சந்தைக்கு உகந்தவாறு புத்தாக்கங்களை அறிமுகம் செய்தல் மற்றும் புதிய தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டன.

இல.	நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை	கைப்பணிக் கைத்தொழில்துறை	ஆரம்பத் திகதி மற்றும் நடாத்தப் பட்ட நாட்களின் எண்ணிக்கை	மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நடாத்தப்பட்ட இடம்	கலைஞர்களின் எண்ணிக்கை	ஒருங்கிணைப்பு நிறுவனம் /நிதிப் பங்களிப்பு வழங்கிய நிறுவனம்
01	புதிய தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டம்	ஆடை (நானாவித)	பெப் 23 நாள் 03	மொனராகலை வெல்லவாய்	21	பிரதேச பொருளாதார அபிவிருத்தி நிறுவனம், வெல்லவாய்
02	புத்தாக்க அறிமுகம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்	ஆடை சார்ந்த	பெப். 28 நாள் 02	கண்டி பிலிமதலாவ	10	ஏற்றுமதி அபிவிருத்தி சபை
03	புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்ப ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம்	சணல்	மார்ச் 11 நாள் 04	நுவரெலியா நில்தன்டாஹின்ன	20	பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்,
04	புத்தாக்க உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	ஆடை (ஆடைக் கைத்தொழில்)	ஆக. 24 நாள் 04	கண்டி, உடுதும்பர, தலகுனே	24	பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்,
05	புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	சணல்	செப். 17 நாள் 03	நுவரெலியா நில்தன்டாஹின்ன	18	மாகாண அபிவிருத்தித் திணைக
06	புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	ரெக்சின்	அக். 27 நாள் 01	கண்டி	09	மகளிர் அபிவிருத்தி நிலையம்

அதற்கமைய 2020 ஆம் ஆண்டில் புத்தாக்கங்களை அறிமுகம் செய்யும் செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 29 ஐ மேற்கொள்வது இலக்காகக் கொள்ளப்பட்டதுடன், அதன் கீழ் புத்தாக்கங்களை அறிமுகம் செய்யும் 13 செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நாடு முழுவதிலும் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு பயனாளிகள் 299 பேருக்கு புத்தாக்கம் மற்றும் புதிய தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொடுத்து சந்தைக்குப் பொருத்தமான புத்தாக்கங்களை அறிமுகம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு புத்தாக்கங்களை அறிமுகம் செய்தல்

கைப்பணிக் கைத்தொழில் துறையில் சந்தைக்குப் பொருத்தமான புத்தாக்கங்களைத் திட்டமிடுவது தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பிரதான பணியொன்றாகும் என்பதுடன், அவ்வாறு திட்டமிடப்பட்டுள்ள புத்தாக்கங்களை பல்வேறு விதமாக கைப்பணிக் கலைஞரிடம் சமர்ப்பிப்பதற்கு தேசிய வடிவமைப்பு நிலையம் செயற்பட்டு வருகின்றது. செயற்றிட்டத்தின் கீழ், அரசசார்பற்ற அமைப்புக்களின் ஏற்பாடுகளின் கீழ், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கைகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற புத்தாக்கங்களை அறிமுகம் செய்யும் பயிற்சி நிகழச்சித்திட்டங்கள் ஊடாக மற்றும் நிறுவனத்தின் வேலைத்தளங்களுக்கு வருகைதந்து பயிற்சி பெறுகின்றவர்கள் ஊடாக மற்றும் கலைஞர்களின் கோரிக்கை மற்றும் தேவையின் அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற புத்தாக்க திட்டங்கள் மூலம் தேசிய வடிவமைப்பு நிலையமானது கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு புத்தாக்கங்களை அறிமுகம் செய்கின்றது.

அதற்கமைய மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2020 ஆம் ஆண்டில் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் திட்டமிடப்பட்டுள்ள 525 புத்தாக்கங்களை அறிமுகம் செய்ய இலக்காகக் கொள்ளப்பட்டதுடன், 230 புத்தாக்கங்களை உண்மையாக அறிமுகம் செய்ய முடியுமாயிற்று.

சந்தை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு அறிமுகம் செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற புத்தாக்கங்களுக்கான சந்தை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை சந்தைப்படுத்தல் பிரிவினூடாக மேற்கொண்டு அதன் பெறுபேறாக அதற்குரிய அதவானிப்புக்களை வடிவமைப்புப் பிரிவுக்கு பெற்றுக் கொடுப்பதுடன், அதற்கமைய, சந்தைத் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான புத்தாக்கங்களை வடிவமைப்பதை மேற்கொள்ளத் தேவையான வழிகாட்டல்கள் இந்த சந்தை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் கீழ், தேசிய வடிவமைப்பு நிலையத்தில் கைப்பணிக் கைத்தொழில் துறைகள் 10 இன் கீழ் காணப்படுகின்ற வேலைத்தளங்ள் ஊடாக வெளியிடப்படும் புத்தாக்கங்களை உள்ளடக்கியதாக பின்வரும் நிறுவனங்களை பிரதானமாகக் கொண்டு இலக்காகக் கொள்ளப்பட்டவாறு புத்தாக்க சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 04 நடாத்தப்பட்டன.

1. லக் ஆகேட் நிறுவனம் - சனவரி மாதம்
2. லக் பஹன நிறுவனம் - சனவரி மாதம்
3. கலய நிறுவனம் - பத்தரமுல்ல - யூன் மாதம்
4. கண்டி நிறுவனம் - கடவத்த - யூன் மாத்

கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகளுக்கான சந்தைத் தொடர்புகளை கட்டியெழுப்பல்

தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் உருவாக்கப்படுகின்ற புத்தாக்கங்களுக்கு சந்தைத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதன் கீழ் பின்வரும் பணிகளின் கீழ் லக்சல, லக்பஹான மற்றும் தனியார் கொள்வனவாளர்கள் ஊடாக கைப்பணிக் கலைஞர்கள் 18 பேருக்கு சந்தை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

மேலும், மேற்படி நிறுவனங்கள் நேசர் லங்கா ஏற்றுமதி நிறுவனத்தினூடாக ஏற்றுமதி மேம்படுத்தல் நிகழ்சசித்திட்டத்தின் கீழ் 59 புத்தாக்கங்களை சந்தைக்கு அறிமுகம் செய்ய இந்த ஆண்டில் தேசிய வடிவமைப்பு நிலையம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கைப்பணிக் கைத்தொழில் புதிய உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

தேசிய வடிவமைப்பு நிலையம் வருடாந்தம் ஒழுங்கு செய்கின்ற புத்தாக்க கைப்பணிக் கண்காட்சியை முன்னிட்டு உற்பத்திகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் 2020 ஆம் ஆண்டிலும் அமுல்படுத்தப்பட்டது.

அதற்கமைய, தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் கைப்பணிக் கைத்தொழில் துறைக்காக வடிவமைக்கப்படுகின்ற புத்தாக்கங்கள் இந்த உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நாடு முழுவதிலும் பரந்துள்ள கலைஞர்களில் திறமைகளைக் கொண்ட கைப்பணிக் கலைஞர்களுக்கு அறிமுகம் செய்வது மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், கலைஞர்களுக்கு இந்தப் புத்தாக்கங்களை அறிமுகம் செய்யும் போது, இந்த ஆக்கங்களை மேற்கொள்ளத் தேவையான அறிவு, தொழில்நுட்பம் என்பன தேசிய வடிவமைப்பு நிலையத்தின் அலுவலர்களினால் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், மேற்படி புத்தாக்கங்களை உற்பத்தி செய்வது பற்றி தொடர்ச்சியாக பின்னாய்வும் மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்படி வழிகாட்டலின் கீழ், கைப்பணிக் கலைஞர்களினால் தரமான மட்டத்தில் மேற்படி உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த ஆண்டின் உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், பத்திக் உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கி மேற்கொள்ள தேசிய வடிவமைப்பு நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, 2020 ஆம் ஆண்டில் உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பத்திக் சார்ந்த 68 புத்தாக்கங்கள் மற்றும் ஏனைய துறைகளை உள்ளடக்கியதாக மொத்தம் 77 புத்தாங்கள் கைப்பணிக் கலைஞர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டன.

பிற நிறுவனங்கள் ஒழுங்கு செய்கின்ற கண்காட்சிகள் மற்றும் நிறுவனங்கள் ஒழுங்குசெய்கினற் ஏனைய அபிவிருத்தி நிகழச்சித்திட்டங்கள்

அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற கண்காட்சிகளுக்கு தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பங்களிப்பை பெற்றுத் தருமாறு வருடம் முழுவதிலும் கோரிக்கை விடுக்கப்படுவதுடன், அரச நிறுவனம் என்ற வகையில் கட்டாயமாக பங்களிப்பை வழங்க வேண்டிய கண்காட்சிகளுக்கு பங்களிப்பை பெற்றுக் கொடுக்கவும், கைப்பணிக் கலைஞர்களின் முன்னேற்றததிற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் ஊடாக உபகரணங்களை வழங்கிவைக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கும் தேசிய வடிவமைப்பு நிலையம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய, 2020 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1) தொழிலற்ற இளைஞர் குழுக்கள் மற்றும் சம்பிரதாயபூர்வமான கைப்பணிக் கைத்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்பும் கருத்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்ட பயானிகள் 99 பேருக்கு உபகரணம் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு சனவரி மாதம் நடாத்தப்பட்டது.
2) 'இனோ ரெக் கண்காட்சி'- கொழும்பு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தினால் ஒழுங்குசெய்யப்ப்டடு மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டதுடன், இக்கண்காட்சியில் தேசிய வடிவமைப்பு நிலையம் பங்கேற்றதுடன், புத்தாக்கங்களை வெளியிட்டு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நூலக சேவைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்

கைப்பணிக் கைத்தொழில் துறை தொடர்பிலான விசேட மற்றும் அரிதான புத்தகங்களை கொண்ட இந்த நூலகம் மூலம் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற டிப்ளோமா பாடநெறியைக் கற்கின்ற மாணவர்கள் மற்றும் கைப்பணிக் கைத்தொழில் துறை தொடர்பிலான கற்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பல்கலைக் கழக மாணவர்களுக்குத் தேவையான அறிவைப் பெற்றுக் கொடுக்க பெரும் உறுதுணையாக அமைந்துள்ளதுடன்,

இதற்கு மேலதிகமாக கைப்பணிக் கலைஞர்களுக்கும், இத்துறை தொடர்பில் ஊக்கம் கொண்டுள்ளவர்களுக்கும் தேவையான நூலக சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், தகவல்களை வழங்குதல் மற்றும் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு அவசியமான ஆக்கவடிவமைப்புக்களின் பிரதிகளைப் பெற்றுக் கொடுக்கும் சேவையும் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய முன்வடிவமைப்புக் கல்லூரி

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் கீழ் பேணிவரப்படுகின்ற இலங்கை தேசிய வடிவமைப்புக் கல்லூரி ஊடாக தேசிய வடிவமைப்பு டிப்ளோமா பாடநெறி மற்றும் தேசிய வடிவமைப்பு உயர் டிப்ளோமா பாடநெறி மூலம் இந்தத் துறையில் ஊக்கம் கொண்டுள்ள இளைஞர் யுவதிகளுக்குத் தேவையான கோட்பாடுசார் மற்றும் செயன்முறை அறிவைப் பெற்றுக் கொடுத்து அவர்களை தொழில்சார் வடிவமைப்பாளர்களாக வலுவூட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பாடநெறிகளைக் கற்றுக் கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளும் கோட்பாடுசார் மற்றும் செயன்முறை அறிவைப் பயன்படுத்தி சுயதொழில் வாய்ப்புக்களை ஆரம்பிக்கவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

மேற்படி பாடநெறிகள் வார இறுதி பாடநெறிகளாக அமுல்படுத்தப்படுவதுடன், இந்த ஆண்டில் இவ்விரண்டு பாடநெறிகளும் நடாத்தப்பட்டன.

இந்தப் பாடநெறியில் பங்கேற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறாகும்.

1. வீட்டு உட்புற முன்வடிவமைப்பு பற்றிய தேசிய டிப்ளோமா பாடநெறி – 2019-2020 (வாரஇறுதி)
   இப்பாடநெறியின் கற்கை நடவடிக்கைகளுக்கு மாணவர்கள் 60 பேர் 2019 ஆம் ஆண்டு இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். மேற்படி பாடநெறியின் கற்கை நடவடிக்கைகள் இந்த ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டன.
2. வீட்டு உட்புற முன்வடிவமைப்பு பற்றிய தேசிய உயர் டிப்ளோமா பாடநெறி – 2018-2020 (வாரஇறுதி)
   இப்பாடநெறியின் கற்கை நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதற்கு மாணவர்கள் 34 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். 2020 ஆம் ஆண்டிலும் இதன் கற்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பதவியணிக்கான ஊக்குவிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் - 2020

இந்த ஆண்டில் எமது நிறுவனத்தின் அலுவலர்களுக்கு அவ்வவ் துறைசார் விசேடமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன், எமது நிறுவனத்தின் ஊடாக நாட்டுக்கு ஆற்றப்படவேண்டிய சேவைகள் மற்றும் பொறுப்புக்களை மிக்க வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் உச்ச பங்களிப்புடனும் நிறைவேற்றத் தேவையான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் சகல பதவியணியினர் மத்தியிலும் குழு உணர்வை வளர்த்தல், கூட்டாகவும், அன்னியோன்ய உறவுகளை வளர்ப்பதற்காகவும் தலைமைத்துவப் பயிற்சி – சாதகமான மனப்பாங்கு அபிவிருத்தியை உள்ளடக்கிய ஊக்குவிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று 2020.01.20 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

வடிவமைப்பு மற்றும் பொருட்களின் உற்பத்திக்கான மூலப்பொருட்கள் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளல்.

உற்பத்தி நுட்பமுறைகள், புதிய இயந்திரசாதனங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள், மாற்று மூலப் பொருட்கள் மற்றும் புதிய உற்பத்திச் செய்முறைகளை அறிமுகம் செய்தல்.

- கருவிகள் மற்றும் உபகரணங்களுக்கு மாற்று மூலப் பொருட்கள் மற்றும் புதிய உற்பத்திச் செயற்பாடுகளுக்கான புதிய கண்டுபிடிப்புக்கள் -
  பிரம்பு மற்றும் பலகை ஆகிய மூலப்பொருட்களுக்கு மற்றும் அரக்குக் கைப்பணிக் கைத்தொழில்துறைக்கு புதிய தொழில்நுட்ப இயந்திரங்கள் 02 இந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

01. **வடிவமைக்கப்பட்ட பிரம்பு மற்றும் பலகை ஆகிய மூலப்பொருட்களுக்கான புதிய தொழில்நுட்ப இயந்திரம்**

02. **அரக்கு கைப்பணிக் கைத்தொழில்துறைக்கான புதிய தொழில்நுட்ப இயந்திரத்தை உற்பத்தி செய்தல்**





- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்ட திண்மக் கழிவுபொருட்கள், களிமண் சார்ந்த உற்பத்திகளுக்கு மூலப் பொருளாகப் பயன்படுத்திக் கொள்வது பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- ஒரு தடவை பயன்படுத்திய களிமண் தயிர் சட்டிகளை மீண்டுமொரு தடவை தயிர் உற்பத்திக்குப் பயன்படுத்திக் கொள்வது பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- பத்திக்கிற்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய சுகாதார ரீதியில் பாதுகாப்பான மாற்று டை வகைகள் பற்றி ஆராய்தல்.
- களிமண் நீர் வடிகட்டி இயந்திரம் மூலம் நீரிலுள்ள இரசாயனப் பதார்த்தங்களை அகற்றுவது பற்றி இலங்கை தர நியமனத்திற்கு நீர் மாதிரிகளை அனுப்புவதன் மூலம் பரிசோதனை செய்தல்.

தகவல் வங்கியொன்றைப் பேணிவருவதும், இற்றைப்படுத்துவதும்

தகவல் வங்கியொன்றைப் பேணிவருதல் மற்றும் இற்றைப்படுத்துவதானது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதன் கீழான ஒரு பணியாக, கைப்பணிக் கலைஞர்களின் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான முறையான பொறிமுறையொன்றைத் தயார் செய்தல் மற்றும் தகவல்களை உள்ளடக்கிய இணையத்தை - slndc.gov.lk இற்றைப்படுத்துவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தேசிய வடிவமைப்பு நிலையத்தினூடாக சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்

2020 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தின் கீழ் நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்பட்ட மற்றும் வேறு நிறுவனங்களின் கோரிக்கைகளின் கீழ் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் ஏற்பாடுகளின் கீழ் புத்தாக்க செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தேசிய வடிவமைப்பு நிலையத்திடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் 299 பேருக்கு கட்டளைகள் மற்றும் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், சந்தை, கைப்பணிக் கலைஞர்கள், துறைசார் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல், நிறுவனத்தின் வேலைத்தலங்களில் செயன்முறைப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல், பொது வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், நிறுவனத்திற்கு வருகைதருகின்ற அல்லது கோரிக்கைகளின் அடிப்படையில் வடிவமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற சேவைகள் ஊடாக மற்றும் கைப்பணிக் கைத்தொழில் துறை பற்றி ஊக்கம் கொண்டுள்ள மற்றும் கற்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக் கழக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கைப்பணிக் கைத்தொழில் துறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளும் கருத்திட்டங்களுக்குத் தேவையான கோட்பாடுசார் மற்றும் செயன்முறை அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கு மற்றும் நிறுவனத்திற்கு குழுக்களாக வருகைதருகின்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி தேவையான சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவைகளின் கீழ் தேசிய வடிவமைப்பு நிலையம் பயனாளிகள் 591 பேருக்கு சேவைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வடிவமைப்பு ஆலோசனைச் சேவைகள்

தேசிய வடிவமைப்பு நிலையம் தொழில்சார் மட்டத்திலான வடிமைப்பு ஆலோசனைச் சேவைகளைப் பின்வரும் துறைகளின் கீழ் பெற்றுக் கொடுக்கின்றது.

- ஆக்கங்களுக்கான எண்ணக்கருக்களை கட்டியெழுப்பல்,
- வீட்டு உள்ளக அழக்கார நடவடிக்கைகள்
- கண்காட்சிகளுக்கான ஆக்க நடவடிக்கைகள் (உள்ளக மற்றும் வெளிப்புற)
- நினைவுச் சின்னம் மற்றும் நினைவுத்தூபிகள் மற்றும் நினைவு ஆக்கங்கள்
- கிறபிக் வடிவமைப்பு

2020ஆம் ஆண்டில் நிறுவனத்தினால் பின்வரும் வடிவமைப்பு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன.

ஆலோசனை சேவை	பணியை வழங்கிய நிறுவனம்	கருத்திட்டத்தின் பெறுமதி ரூ.மி.
மாத்தளை அளுவிஹாரை –தகவல் மற்றும் கண்காட்சி நிலையம் - வடிவமைத்துத் திட்டமிடல் மற்றும் நிர்மாணிப்பு	வர்த்தக, வாணிப மற்றும் சுற்றுலா திணைக்களம் - மத்திய மாகாணம்	1.16
சணத் ஒழுங்குபடுத்தல் இயந்திரம் வழங்குதல்	வர்த்தக, வாணிப மற்றும் சுற்றுலா திணைக்களம் - மத்திய மாகாணம்	0.21
நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்காக "வன் ஸ்ரொப் சொப்" சேவை நிலையங்களைத் தாபிக்கும் முன்னோடிக் கருத்திட்டம் - வடிவமைப்புத் திட்டமிடல் மற்றும் மதிப்பீடுகளைத் தயார் செய்தல்	கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகால இடம்பெயர்ந்துள்ள ஆட்களை மீளக் குடியமர்த்தல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு	
சீகிரிய கைப்பணிக் கைத்தொழில் வர்த்தக நிலைய வடிவமைப்புத் திட்டம் மற்றும் மதிப்பீடுகளைத் தயார் செய்தல்	தேசிய அருங்கலைகள் பேரவை	
2020 நத்தார் வைபத்தின் பிரதான தேசிய திருப்பலி பூசை தொடர்பான நத்தார் அழங்கரிப்பு – புனித செபஸ்தியன் தேவாலயம், கந்தானை	பத்திக், கைத்தறி இயந்திர ஆடை மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு	0.3

அமைச்சு சார்பாக மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆலோசனை சேவைகள் அறவீடுகள் இன்றி மேற்கொள்ளப்பட்டன.

மேலும், ஆலோசனை சேவைகளின் கீழ் மற்றும் பிற நிறுவனங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் கிறபிக் மற்றும் வீட்டு உட்புற அழங்கார வடிவமைப்புக்கள் 40 ஐ திட்டமிட இலக்காகக் கொள்ளப்பட்டதுடன், நேர்வரிசை அமைச்சின் தேவைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் கோரிக்கைகளின் பேரில் கிறபிக் மற்றும் வீட்டு உட்புற அழங்கார

வடிவமைப்புக்கள் 63 ஐத் திட்டமிடுவதற்கு வடிவமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.


தேசிய வடிமைப்பு நிலையத்தின் புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல்

மொரட்டுவை கட்டுபெத்தயில் அமைந்துள்ள தேசிய வடிவமைப்பு நிலையத்தின் வளவில் பழைய கட்டிடத்தை அகற்றி புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ரூ.மி. 80 ஆன தொகை 2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டதுடன், இதன் நிர்மாணப் பணிகள் இந்த ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன.

விசேட செயற்பாடுகள்

- **புத்தாக்க பேடன்ட் உரிமப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல்.**

செங்களி சார்ந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள புத்தாக்கங்களுக்கு இந்த ஆண்டில் தேசிய வடிவமைப்பு நிலையத்திற்கு பேடன்ட் உரிமப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.



❖ **தேசிய வடிவமைப்பு நிலையத்தின் தலைமை அலுவலகத்தின் வேலைத்தள வளவை புதுப்பித்தல்**

இப்பணி தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பதவியணியினரின் பெரும்பாலானோரின் ஊழியப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.







தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2020 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றம்

நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம்/ செயற்பாடு	ஒதுக்கம் ரூ.மி.	நிதிசார் முன்னேற்றம் ரூ.மி.	செயலாற்றுகை தகவுதிறன்	இலக்கு	பூர்த்தி செய்து கொள்ளல்
கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களுக்கு புதிய உற்பத்திகள் / புத்தாக்க அபிவிருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	3.735	0.983	நிறுவனத்தினால் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	23	07
			பயிற்சி பெற்ற கலைஞர்களின் எண்ணிக்கை	600	197
			கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை	525	230
கோரிக்கைகளின் அடிப்படையில் புத்தாக்க அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	0.600+ வெளி ஏற்பாடுகள்	0.013	பிற நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்து நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	06	06
			பயிற்றப்பட்ட கலைஞர்களின் எண்ணிக்கை	120	102
அமுல்படுத்தப்பட்டு வருகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்	0.300	0.006	கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	03	01
தேசிய வடிவமைப்பு நிலையத்தின் வேலைத்தளத்தில் பயிற்சியளித்தல்	--	--	பயிற்றப்பட்ட கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்கள் /மாணவர்களின் எண்ணிக்கை	60	67
மாணவர்கள் மற்றும் துறைசார் ஊக்கத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு பொது வசதிகள் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்	--	--	சேவை பெற்றுக் கொண்டவர்கள் எண்ணிக்கை	600	207
கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களுக்கு நூலக சேவைகளை ஆற்றுதல்	--	0.188	பயானிகள் எண்ணிக்கை	30	--
கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களின் அறிவு மற்றும் ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக உரிய புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளை நூலகங்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்	0.200				

நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம்/ செயற்பாடு	ஒதுக்கம் ரூ.மி.	நிதிசார் முன்னேற்றம் ரூ.மி.	செயலாற்றுகை தகவுதிறன்	இலக்கு	பூர்த்தி செய்து கொள்ளல்
சந்தை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்	0.150	0.014	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	4	4
			சந்தை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை	30	59
சந்தைக்குப் பொருத்தமான புத்தாக்க கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு அறிமுகம் செய்தல்	0.300	0.196	புத்தாக்கத் திட்டங்களின் எண்ணிக்கை	700	438
புத்தாக்க திட்டங்களுக்கான எழுதுகருவிகளைப் பெற்றுக் கொடுத்தல்					
வடிவமைப்புத் துறையின் திறன் அபிவிருத்தி (உபகரணம், இலத்திரனியல் ஊடகம்) – தலைமை அலுலவகம்	0.703	0.115			
நத்தரம்பொத்த அலுவலகத்தின் வடிவமைப்புப் பிரிவின் திறன் அபிவிருத்தி (உபகரணம் பெற்றுக் கொடுத்தல்)	0.365	0.286			
புத்தாக்க வடிவமைப்புக்களை உருமாதிரிகளாக்குவதற்கு மூலப் பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல், வெளியே உள்ள கலைஞர்களுக் உருமாதிரிகளை தயார் செய்துகொடுத்தல்	1.062	0.840	புத்தாக்க உருமாதிரிகளின் எண்ணிக்கை	500	354
தே.வ.நி. வேலைத்தளங்களுக்கு	1.847	0.951			

திறன் அபிவிருத்தியை மேம்படுத்தல் (இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்கள்)					
உற்பத்தி உபாயமுறைகள், புதிய இயந்திரசாதனங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள், மாற்று மூலப் பொருட்கள், புதிய உற்பத்திச் செயன்முறைகளை அறிமுகம் செய்தல்	0.725	0.310	கருவிகள் மற்றும் உபகரணங்கள், மாற்று மூல்பொருட்கள் மற்றும் புதிய உற்பத்திச் செயன்முறைக்கான புதிய கண்டுபிடிப்புக்களின் எண்ணிக்கை	02	01
யுகயட்ட நிமவும் புத்தாக்க கண்காட்சியை முன்னிட்டு **புத்தாக்க மற்றும் புதிய உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்**	2.500	1.249	கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்ட சந்தையில் பிரபல்யமடைந்துள்ள புத்தாக்கங்களின் எண்ணிக்கை	350	77
யுகயட்ட நமவும் புத்தாக்கக் கண்காட்சியை நடாத்தல்	7.000	1.028	புத்தாக்க கண்காட்சிகளின் எண்ணிக்கை	01	--
			கண்காட்சி ஊடாக அறிமுகம் செய்யப்பட்ட சந்தைக்குப் பொருத்தமான புத்தாக்கங்களின் எண்ணிக்கை	280	--
			சந்தை தொடர்புகளின் எண்ணிக்கை (கலைஞர்கள்)	100	18
			கண்காட்சி மற்றும் சந்தை ஆய்வு மூலமான வருமானம்	රු.මි. 1.500	රු.මි. 0.242
ஏனைய நிறுவனங்கள் ஒழுங்குசெய்துள்ள கண்காட்சிகளில் பங்குபற்றல்	0.750	0.244	கண்காட்சி மற்றும் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	04	02
கைப்பணிக் கைத்தொழில் மேம்பாடு மற்றும் தாபனச் சேவைகள் தொடர்பிலான ஊடுறுவத்தக்க	1.000	0.885	ஊடுறுவத்தக்க ஆவணவாக்கல்	01	01

ஆவணவாக்கல்					
வடிவமைப்பு ஆலோசனைச் சேவை	வெளி ஏற்பாடுகள்		வழங்கப்பட்ட வடிவமைப்பு ஆலோசனைச் சேவைகளின் எண்ணிக்கை	03	05
கிறபிக் மற்றும் வீட்டு அழங்கார புத்தாக்கத் திட்டமிடல்			திட்டமிடப்பட்ட கிறபிக் மற்றும் வீட்டு உட்புற புத்தாக்கங்களின் எண்ணிக்கை	40	63
நிர்மாணத்துறைக்கு அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகளை அறிமுகம் செய்தல்	உழைப்பின் மீது				
தேசிய வடிவமைப்பு நிலையத்தின் கீழ் உள்ள முன்வடிவமைப்பு கல்லூரி ஊடாக டிப்ளோமா பாடநெறிகளை நடாத்தல்			டிப்ளோமா பாடநெறிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	70	--
உயர் டிப்ளோமா பாடநெறியை நடாத்தல்			உயர் டிப்ளோமா பாடநெறிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	30	--
			உழைப்பு வருமானம்	ரூ.மி. 5	ரூ.மி. 2.126
பதவியணிக்கான பயிற்சி	0.600	0.323	பயிற்றப்பட்ட எண்ணிக்கை	139	116
உள்ளக உட்கட்டமைப்பு வசதிகள் (கட்டிடம்)	2.112	0.830	பூர்த்தி செய்வதன் விகிதம்	100%	75%
முன்வடிவமைப்புக் கல்லூரி (வாடகைக் கட்டிடத்திற்கு)	1.020 (உழைப்பு மீது)	0.850 (உழைப்பு மீது)	பூர்த்தி செய்வதன் விகிதம்	100%	83%
உதவிப் பிரிவுக்கு அலுவலக உபகரணம் கொள்வனவு செய்தல்	1.599	1.602	நிறைவு செய்யும் விகிதம்	100%	75%
புதிய கட்டிடத்தில் வளிச்சீராக்கியை பொருத்தல்	3.970	0.738			60%
புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள்	19.374	7.347			98%
முழு மூலதன ஒதுக்கம்	**48.892**	**18.148**			

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் சட்டத்திற்கு அமைய பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளின் முன்னேற்றம்

